# දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
# DEPARTMENT OF INLAND REVENUE

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2- ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு - 2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011 - 2338574/ 2338659/ 2338635/ 2338570/ 2338543

දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135402/ 2135410/ 2135412 / 2135413/ 20135411

E-Mail – secretariat@ird.gov.lk
Web: www.ird.gov.lk


**SEC 2015/10** **2015.12.29**

## 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் VIII இன் நியதிகளின்படி விதிக்கப்படும் குடியகல்வு வரி

**தனி நபர்கள் (நிரந்தரமாக நாட்டினை விட்டு வெளியேறிச் செல்பவர்கள்) வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான (அனுப்புதல்களுக்கு முன்னதாக விடுவிப்புச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்கான பொறுப்பு) அறிவுறுத்தல்கள்.**

**(1) நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையும் வரி விதிப்பனவுக்கு பொறுப்பாகக் கூடிய தனிநபர்களும்.**

2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் VIII இன் நியதிகளின்படி, 2015 நவம்பர் 1 ஆம் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் குடியகல்வு வரியானது **இலங்கையிலிருந்து நிரந்தரமாக வெளியேறுகின்ற எவரேனும் இலங்கைப் பிரசையிடமிருந்து** அத்தகைய பிரசையினால் நாட்டினை விட்டு வெளியேறும் போது எடுத்துச் செல்வதற்காக விடுவிக்கப்பட்ட அந்நியச் செலாவணி மீது **20** சதவீதப்படி அறவிடப்படுதல் வேண்டும்.

**நிதி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டவாறு,** குடியகல்வு வரியினைச் செலுத்த வேண்டிய பிரஜைகள் மற்றும் பொறுப்புடமையின் நோக்கெல்லை என்பன கீழ்வருமாறு விபரிக்கப்படுகிறது.

i. குடியகல்வு வரியானது 2015 நவம்பர் 01 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கையை விட்டு நிரந்தரமாக வெளியேறுகின்ற இலங்கைப் பிரஜையாக இருக்கின்ற ஆளொருவர் மீது ஏற்புடையதாகும். அதற்கிணங்க, 2015 நவம்பர் 01 ஆம் திகதிக்கு முன்னதாக நாட்டினை விட்டு நிரந்தரமாக வெளியேறுகின்ற ஆளொருவரினால் 2015 நவம்பர் 01 ஆம் திகதியன்று அதன் பின்னர் நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் அந்நியச் செலாவணிக்கு குடியகல்வு வரியினைச் செலுத்தப்பட வேண்டியதில்லை.

ii. 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் VIII இன் நியதிகளின்படி, **அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட குடியகல்வு படி உள்ளடங்கலாக காலத்திற்கு காலம் நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்லப்படுவதற்காக விடுவிக்கப்பட்ட மொத்த அந்நியச் செலாவணி மீது அறவிடப்படுதல் வேண்டும்.**

**(2) பொறுப்புடமை**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் நிமித்தம் நாட்டினை விட்டு வெளியேறிச் செல்கின்ற எவரேனும் பிரஜையினால் நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்லப்படுவதற்கு (குடியகல்வு படி அல்லது வேறு ஏதேனும்) மத்திய வங்கியினால் விடுவிக்கப்படும் மொத்த அந்நியச் செலாவணி மீது (மேற்படி அறிவுறுத்தல்களின்படி) இவ்வரி செலுத்தத்தக்கதாகும்.

i. 2015 நவம்பர் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் வெளிநாடொன்றில் நிரந்தர வதிவுரிமையினைக் பெற்றுக் கொள்ளல். (அத்தகைய அந்நியச் செலாவணியை எடுத்துச் செல்லும் காலப்பகுதி கவனிற் கொள்ளப்பட மாட்டா).

ii. 2015 நவம்பர் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் வெளிநாடொன்றில் தந்காலிக வதிவுரிமையினைக் கொண்டிருந்து, அதன் பின்னர் நிரந்தர வதிவுரிமையினைப் பெற்றுக் கொள்ளல்.

**(3) நடைமுறைகள்**

i. **ஒவ்வொரு வங்கியும் தொகையினைக் கருத்தில் கொள்ளாது வெளிநாட்டு அனுப்புதல்களை மேற்கொள்வதற்கு முன்னதாக ஆணையாளர் நாயகத்தினால் குடியகல்வு வரி செலுத்தியமையை உறுதிப்படுத்தி வழங்கப்படும் விடுவிப்புச் சான்றிதழினை பெற்றுக் கொள்ளுமாறு தமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருமாறு அறிவுறுத்தப்படுகின்றது. (ரூபா 1,000,000 இனை விஞ்சாத வெளிநாட்டு அனுப்புதல்களாக இருக்குமிடத்து, விடுவிப்புச் சான்றிதழினை தவிர்ப்பது (வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் நடைமுறைச் செயற்பாடு) ஏற்புடையதாகாது.**

ii. குடியகல்வு வரியினைச் செலுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டிருக்கின்ற பிரஜைகளுக்கான விடுவிப்புச் சான்றிதழானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி செலுத்துனர் சேவைப் பிரிவு ஆணையாளரினால் வழங்கப்படும்.

ஏனைய அனைத்து விடயங்களிலும் (நிரந்தர வதிவுரிமையை பெற்று, 2015 நவம்பர் 1 இற்கு முன்னதாக நாட்டினை விட்டு வெளியேறிச் சென்றிருக்குமிடத்து, குடியகல்வு வரிக்குப் பொறுப்பாகமாட்டார். ஆனால் நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் பணம் மீது ஏனைய வரிகளுக்கு பொறுப்பாகக் கூடும். ஆகையால்) வரி விடுவிப்புச் சான்றிதழானது குறித்த வரிக் கோவை கையாளப்படுகின்ற உரிய கிளை / பிராந்திய அலுவலகத்தினால் வழங்கப்படும். எனவே, வரி செலுத்துனர் உரிய அலகு / கிளை அல்லது பிராந்திய அலுவலகத்தில் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(அ) நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்லப்படுவதற்கு விடுவிக்கப்பட்ட மொத்த அந்நியச் செலாவணியை உறுதிப்படுத்தும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கடிதம்

(ஆ) குடியகல்வு திகதி (பிரஜையானவர் 2015 நவம்பர் 1 இற்கு முன்னதாக அல்லது குறித்த திகதியின் பின்னர் நிரந்தரமாக நாட்டினை விட்டு வெளியேறி சென்றுள்ளாரா என்பதனை உறுதிதப்படுத்துதல்)

(இ) குடியகல்வு படித்தொகை மற்றும் நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்வதற்காக அனுமதியளிக்கப்பட்ட வேறு ஏதேனும் படிகள்

(ஈ) விடுவிப்புச் சான்றிதழின் வழங்குகை தொடர்பில் திணைக்கள இணையத்தளத்தில் விதித்துரைக்கப்பட்டவாறான வேறு ஏதேனும் தகவல் / தேவையான விபரங்கள்

iii. அத்தகைய பிரஜை, 2015 நவம்பர் 1 இற்கு முன்னதாக நாட்டினை விட்டு வெளியேறிச் சென்று அதனைத் தொடர்ந்து பணத்தினை நாட்டிற்கு அனுப்பி வைத்திருப்பாராயின், விடுவிப்புச் சான்றிதழானது உழைக்கப்பட்ட சம்பாத்தியங்களிற்கான வரி (ஏதேனுமிருப்பின்) செலுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மாத்திரம் பெறப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், குடியகல்வு வரிக்குப் பொறுப்பில்லாத போதிலும், அத்தகைய அனுப்புகைகள் மீது செலுத்தப்படத்தகு வரி தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு விடுவிப்புச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும்.

அத்தகைய விடயங்கள் மீதான விடுவிப்புச் சான்றிதழானது அவரது வரிக் கோவை பேணப்படும் உரிய கிளை / பிராந்திய அலுவலகத்தினால் விநியோகிக்கப்படும். அவ்விதம் வரிக்கோவையொன்று குறித்த பிரஜைக்குக் காணப்படாதவிடத்து, குறித்த வரி விடுவிப்புச் சான்றிதழ் வரி செலுத்துனர் சேவைப் பிரிவினால் வழங்கப்படும்.

2015, நவம்பர் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் நிரந்தரமாக நாட்டினை விட்டு வெளியேறிச் செல்கின்ற எவரேனும் பிரஜையானவர், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய இயைபான குடியகல்வு வரியினைச் செலுத்தியதன் பின்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட விடுவிப்புச் சான்றிதழினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

ஏதேனும் மேலதிக விபரம் தேவைப்படின், வரி செலுத்துனர் சேவைப் பிரிவின் சிரேஷ்ட ஆணையாளர் / ஆணையாளருடன் 011 2134170, 011 2134171 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் www.ird.gov.lk எனும் இணைத்தளத்தினைப் பார்வையிடவும்.

Kalyani Dahanayake
Commissioner General of Inland Revenue

கல்யாணி தஹநாயக்க
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்